இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 13-07-2024

# மக்களோடு மக்களாக முதல்வர்!

மக்களுக்காக உழைத்து - மக்களுடனே வாழ்ந்து. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு - மக்களாட்சியை நடத்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் உருவாக்கிய மகத்தான திட்டங்களில் ஒன்று 'மக்களுடன் முதல்வர்' என்ற இந்த மாபெரும் திட்டம்!

சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னதாக ஒவ்வொரு தொகுதிக்கும் சென்று மக்களின் கோரிக்கைகளை தி.மு.க. தலைவராக தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் திரட்டினார்கள். 'திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி பொறுப்பேற்ற 100 நாட்களில் உங்களது கோரிக்கைகள் அனைத்தையும் பரிசீலித்து சாத்தியமான அனைத்துத் திட்டத்தையும் உருவாக்கித் தருவேன்' என்று வாக்குறுதி தந்தார்கள். மாண்புமிகு முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் - 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' என்ற தனித்துறையை உருவாக்கி அந்தக் கோரிக்கைகளில் பெரும்பாலான வேண்டுகோள்களை நிறைவேற்றியும் வைத்த சாதனை முதலமைச்சர் தான் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள்.

தேர்தலுக்கு முன்னதாக வாங்கிய மனுக்களுக்குத் தீர்வு கண்டதோடு, தனது வாக்குறுதி நிறைவேறிவிட்டதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நினைக்கவில்லை. 'வேண்டுகோள்களே' இல்லாத வகையில் தமிழ்நாடு அமைய வேண்டும் என்று நினைத்து 'முதல்வரின் முகவரி' என்ற தனித்துறையை உருவாக்கினார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**'முதல்வரின் முகவரி' என்ற துறையின்கீழ் கடந்த மூன்றாண்டு காலத்தில் 68 லட்சத்து 30 ஆயிரத்து 281 மனுக்கள் பெறப்பட்டன. அதில் 66 லட்சத்து 25 ஆயிரத்து 304 மனுக்களுக்கு உரிய முறையில் தீர்வு காணப்பட்டுள்ளது. மக்களாட்சியின் மாபெரும் சாதனை இது. மக்கள் தங்களது கோரிக்கைகளை அனுப்பினால் மட்டுமே நடவடிக்கை என்பதாக இல்லாமல், கோரிக்கை மனுக்களை அரசாங்கமே மக்களது இருப்பிடத்துக்குச் சென்று வாங்க வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் நினைத்தார்கள். அதற்காக உருவாக்கப்பட்டதுதான், 'மக்களுடன் முதல்வர்' என்ற திட்டமாகும்.**

பொதுமக்கள் அதிகமாகத் தொடர்பு கொள்ளும் 15 அரசுத் துறைகள் தொடர்பான கோரிக்கைகளை மட்டும் முகாம்கள் மூலமாகப் பெற்று அந்தக் கோரிக்கைகள் 30 நாட்களுக்குள் நிறைவேற்றித் தரப்பட வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள். முதலில் நகராட்சிப் பகுதியில் இந்த முகாம்கள் நடத்தப்பட்டன. 8.74மனுக்களுக்குஇதுவரைதீர்வுகாணப்பட்டுள்ளது. அடுத்து ஊராட்சிப் பகுதியில் 'மக்களுடன் முதல்வர்' திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் நேற்றைய தினம் (ஜூலை 11) தொடங்கி வைத்துள்ளார்கள்.

இந்தத் திட்டம் எவ்வளவு மகத்தானது என்பதை மக்களே சொல்லி இருக்கிறார்கள்...

★ "என் பெயர் மாலதி. செங்கல்பட்டு மாவட்டம் மூவரசம்பட்டில் வசிக்கிறேன். என் மகன் மாற்றுத்திறனாளி என்பதால் அவனைக் கவனித்துக் கொண்டு நான் வீட்டிலேயே இருக்கிறேன். வேலைக்குப் போக முடியவில்லை. எனவே 'எனக்கு வீட்டில் இருந்தபடியே தொழில் செய்ய கடன் வழங்க வேண்டும்' என்று 'மக்களுடன் முதல்வர்' திட்டத்தில் மனு கொடுத்தேன். மனு கொடுத்த ஒரு மாதத்திலேயே எனக்கு வங்கியின்மூலம் 25 சதவீதம் மானியத்துடன் கடனுதவி தரப்பட்டது. இப்போது வீட்டில் இருந்தபடியே என்னுடைய மகனையும் பார்த்துக் கொண்டு துணிகளை வாங்கி விற்பனை செய்து வருகிறேன்"

★ **எனது பெயர் மீனா ஈஸ்வரி. நான் சென்னை வியாசர்பாடி பகுதியில் வசித்து வருகிறேன். சிறு வயதிலேயே போலியோவால் என்னுடைய இடதுகால் செயலிழந்து விட்டது. இதனால் சிறு வயது முதல் எங்கு வெளியே செல்ல வேண்டும் என்றாலும் மிகவும் சிரமப்பட்டேன். வேறொருவர் உதவியை நாடவேண்டி இருந்தது. கடந்த மாதம் நடந்த 'மக்களுடன் முதல்வர்' சிறப்பு முகாமிற்குச் சென்று மூன்று சக்கர பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்க வேண்டும் என்று மனு அளித்திருந்தேன். மனு அளித்து ஒரு மாத காலத்தில் எனக்கு பெட்ரோல் ஸ்கூட்டர் கிடைத்து விட்டது. தற்போது எங்கு செல்ல வேண்டும் என்றாலும் யாருடைய உதவியும் இல்லாமல் பெட்ரோல் ஸ்கூட்டர் மூலம் சென்று வருகிறேன்".**

★ 3) எனது பெயர் ஸ்ரீலேகா. நான் பி.பார்ம் படித்துள்ளேன். எனக்குத் திருமணம் ஆகி 17 ஆண்டுகள் ஆகிவிட்டது. நான் பல ஆண்டுகளாக மருந்துக் கடை ஒன்றில் வேலை பார்த்து வந்தேன். சொந்தமாக ஒரு கடை வைக்க நினைத்தேன். ஆனால் பணமில்லை. 'மக்களுடன் முதல்வர்' முகாமில் மருந்துக் கடை ஆரம்பிக்க கடனுதவி வழங்க வேண்டும் என்று மனு அளித்தேன். அடுத்த ஒரு மாதத்திற்குள் எனக்கு ரூ 5 இலட்சம், 25 சதவீதம் மானியத்துடன் கடனுதவி அளிக்கப்பட்டது. இப்போது நான் சொந்தமாக மருந்துக் கடை ஒன்றை ஆரம்பித்துள்ளேன். நான் படித்த படிப்பிற்கு ஏற்றாற் போல வேலை செய்து வருகிறேன்.

- இவை அனைத்தும் மக்களின் மனங்களில் இருந்து வரும் வாக்குமூலங்கள். தமிழ்நாட்டின் ஒவ்வொரு குடும்பத்தின் கோரிக்கையையும் கேட்டுக் கேட்டு நிறைவேற்றித் தரும் மக்கள் முதலமைச்சராகச் செயல்படுகிறார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**"தி.மு.க.வைப் பொருத்தவரைக்கும் நாங்கள் மக்களுடன் இருக்கிறோம். மக்களாகிய நீங்கள் எங்களுடன் இருக்கிறீர்கள். இதுதான் எங்களுடைய வெற்றியின் ரகசியம். இதுதான் தமிழ்நாட்டின் வளர்ச்சியின் ரகசியம்" என்று முதலமைச்சர் அவர்கள் சொல்லியது அவரது குரல் மட்டுமல்ல; மக்களின் குரலும் அதுதான்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (12.7.2024) தலைமைச் செயலகத்தில், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தொல். திருமாவளவன் சந்தித்துப் பேசினார்.

### வேலூர் மாவட்டம் - பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு

# அணை கட்டினால் - அதைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்!

## கழகப் பொதுச் செயலாளர் – நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் பேட்டி!

**வேலூர், ஜூலை 13 -**

**வேலூர் மாவட்டம் காட்பாடியில் கழகப் பொதுச் செயலாளர் நீர் வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார்.**



அப்போது அவர்கூறியதாவது:-

ஏரிகளில் இலவசமாக களிமண் மற்றும் வண்டல் மண் எடுத்துக் கொள்ள அரசு அனுமதி வழங்கி உள்ளது. இதன் மூலம் ஏரி மற்றும் குளங்களில் தண்ணீர் தேக்கப்படும்.

மேலும் ஏரி மற்றும் குளங்களில் மண்ணெடுக்கும் போது ஆங்காங்கே எடுக்க விடாமல் அதை முறைப்படி எடுத்து அதிகாரிகள் அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். இதனால் மண் எடுப்பவரும், விவசாயிகளும் பயனடைவார்கள். கிரானைட் முறையீடு தொடர்பாக அறிக்கை வழங்கப்பட்டுள்ளது. தற்போதுதான்அந்தஅறிக்கை எனக்கு வந்துள்ளது. படித்துப் பார்த்த பிறகு முறைகேடு குறித்து தெரியவரும்.

ஆந்திர மாநில முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு பதவியேற்ற பின்னர் முதல் முறையாக குப்பம் தொகுதியில் பேசும்போது பாலாற்றின் குறுக்கே தடுப்பணைகள் கட்டப்படும் என்று தெரிவித்துள்ளார். பாலாற்றின் குறுக்கே தடுப்பணைகளை கட்ட ஆந்திர அரசு முயற்சிகள் மேற்கொண்டால் அதனை தடுக்க தமிழ்நாடு அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கும்.

காட்பாடி ரயில்வே மேம்பாலத்தின் அருகே புதிய மேம்பாலம் கட்டுவதற்கு டெண்டர் விடப்பட்டுள்ளது. அதற்கான பணிகள் விரைவில் தொடங்கப்படும். இதனால் காட்பாடி பகுதியில் போக்குவரத்து நெரிசல் குறையும். காட்பாடி சித்தூர் பஸ் நிலையம் பகுதியில் மழை நீரை தேங்க விடாமல் தடுக்க ஆங்காங்கே தேங்கி இருக்கும் குப்பைகளை உடனடியாக சரி செய்ய வேண்டும், என அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு உள்ளேன்.

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் அவர்கள் கூறினார்.

### பாசிச பா.ஜ. அரசின் மூன்று குற்றவியல் சட்டங்களை எதிர்த்து

# தி.மு.க. சட்டத்துறை சார்பில் - மாபெரும் கருத்தரங்கம்!

## சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. அறிக்கை!

**சென்னை, ஜூலை 13-**

**தி.மு.க. சட்டத் துறை சார்பில் அரசியல் அமைப்பிற்கு எதிரான ஜனநாயகத்திற்கு விரோதமான ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசால் அமல்படுத்தப்பட்டுள்ள மூன்று குற்றவியல் சட்டங்களை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தின் அருகில் உள்ள "இராஜா அண்ணாமலை மன்ற"த்தில் ஜூலை 20 அன்று மாபெரும் "கருத்தரங்கம்" நடைபெறுகிறது என தி.மு.க. சட்டத் துறைச் செயலாளர் என்.ஆர். இளங்கோ எம்.பி. அறிக்கை விடுத்துள்ளார்.**



*அவரது அறிக்கை வருமாறு:-*

*திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி,*


*இந்தியத் திருநாட்டின் நீதி பரிபாலனத்திற்கும் மாநில சுயாட்சிக்கும் மக்களின் அடிப்படை உரிமைகளுக்கும் எதிரானது என்பதோடு, இச்சட்டங்கள் ஜனநாயக நாடாக திகழும் நம் இந்திய திருநாட்டினை, 'காவல்துறை ஆட்சி நாடாக" மாற்றிவிடும் அரசியல் அமைப்பிற்கு எதிரான ஜனநாயகத்திற்கு விரோதமான ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசால் அமல்படுத்தப்பட்டுள்ள மூன்று குற்றவியல் சட்டங்களை எதிர்த்து தி.மு.க. சட்டத்துறையின் சார்பில், கடந்த 5.7.2024 அன்று மாநிலம் முழுவதும் உள்ள மாவட்ட நீதிமன்றங்களின் நுழைவு வாயிலில், மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் எழுச்சியுடன் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து 6.7.2024 சென்னை, எழும்பூர், இராஜரத்தினம் விளையாட்டு அரங்கம் அருகில் "மாபெரும் உண்ணாவிரத அறப் போராட்டம்" இந்தியாவே வியந்து நோக்கும் வண்ணம் மாபெரும் வெற்றியடைந்ததைத் தொடர்ந்து,*

*அரசியல் அமைப்பிற்கு எதிரான ஜனநாயகத்திற்கு விரோதமான ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசால் அமல்படுத்தப்பட்டுள்ள மூன்று குற்றவியல் சட்டங்களை எதிர்த்து, ஒருங்கிணைந்த சென்னை மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணியின் சார்பில், எனது தலைமையில், சட்டத் துறைத் தலைவர் மூத்த வழக்கறிஞர் இரா.விடுதலை அவர்கள் முன்னிலையில் "கருத்தரங்கம்" 20.7.2024 அன்று மாலை 4.00 மணியளவில் சென்னை உயர்நீதிமன்றத்தின் அருகில் உள்ள "இராஜா அண்ணாமலை மன்ற"த்தில் நடைபெற உள்ளது.*

*இக்கருத்தரங்கில், ஒருங்கிணைந்த சென்னை - திருவள்ளூர் - காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த தி.மு.க. வழக்கறிஞர் அணி மாவட்ட, மாநகர நிர்வாகிகள் மற்றும் கழக வழக்கறிஞர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.*

*இவ்வாறு என்.ஆர். இளங்கோ எம்.பி. தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.*

# புனிதர் கலைஞர்!



புனிதர் கலைஞர்
அற்புதங்கள் நிகழ்த்தினார்
புனிதர் எவரையும்விட

புனிதர்கள்
தலையைத் தொடுகிறார்கள்
அவர்களுக்கு ஞானம் பிறந்ததாக
சொல்லப்படுகிறது
புனிதர் கலைஞர்
தலைகளைத் தொடவில்லை
கல்லூரிக் கதவுகளைத் திறக்கிறார்

புனிதர்கள்
நோய்களை சொஸ்தமாக்குவதாக
சொல்லப்படுகிறது
புனிதர் கலைஞர்
மருத்துவமனைகளைத் திறக்கிறார்

புனிதர்கள்
அமுதசுரபிகளையும்
அப்பங்களையும் உண்டாக்குவதாக
சொல்லப்படுகிறது
புனிதர் கலைஞர் ரேஷன் கடைகளைத் திறக்கிறார்

மேலும்
புனிதர்கள் அனைவருமே
செய்த செயல் ஒன்று உண்டு
அவர்கள் பாவிகளை மன்னித்தார்கள்
கல்லால் அடித்தவர்களை
சிலுவையில் அறைந்தவர்களை
எல்லோரையும் மன்னித்தார்கள்

புனிதர் கலைஞரும்
அவ்வாறே செய்தபடி
அமைதியாக உறங்குகிறார்

மன்னிப்பது
புனிதர்களின் இயல்பு
புனிதர்களின் கடமை

புனிதர்களின் தோழர்கள்
புனிதர்களைப்போலவே
மன்னிக்கவேண்டும் என
புனித விதிகள் எதிலும்
சொல்லப்படவில்லை

**புனிதர்கள் விட்டுச் சென்ற**
**காலணிகளுக்கு**
**ஒரு பயன்பாடு இருக்கிறது**
**அது வணங்குவதற்கு அல்ல**
**பதில் அளிப்பதற்கு**



**- மனுஷ்ய புத்திரன்**



கள்ளக்குறிச்சி மாவட்டம் – ரிஷிவந்தியம் தொகுதி – வாணாபுரத்தில் ஊரகப்பகுதிகளில் 'மக்களுடன் முதல்வர்' திட்டத்தைத் தொடங்கி வைத்து அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரை ஆற்றினார், சட்டமன்ற உறுப்பினர்கள் வசந்தம் க.கார்த்திகேயன், தா.உதயசூரியன், ஏ.ஜே.மணிக்கண்ணன், நாடாளுமன்ற உறுப்பினர் மலையரசன், மாவட்ட ஆட்சியர் பிரசாந்த் ஆகியோர் உடன் உள்ளனர்.